SENGKANG GREEN Primary School

Mother Tongue Languages Department

# Primary 6
# Tamil Language Subject Information for Parents 2020

# ஆசிரியர் தகவல்

| பெயர் | வகுப்பு | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|
| Suguna Gopynathan | தொ.2<br>தொ.4<br>தொ.6 | sugunaiswari_gopynathan@moe.edu.sg |
| Syed Ashratullah | தொ.1<br>தொ.3<br>தொ.5 | syed_ashratullah_syed_sebakhatulla@moe.edu.sg |

# தமிழ்மொழிக் கல்வியின் நோக்கம்

**சிங்கப்பூர் மாணவர்களிடையே தமிழை வாழும் மொழியாக்குதல்**

சிங்கப்பூரில் தமிழை வாழும் மொழியாக்குவதற்குத் தமிழ் பயிலும் மாணவர்கள் ஒருவரோடு ஒருவர் தயக்கமின்றிச் சரளமாகத் தமிழில் உரையாடத் தேவையான மொழியாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். மேலும், அவர்கள் தமிழில் தயக்கமின்றிக் கருத்தைப் பரிமாறிக்கொள்ளும் திறனையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

# தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் நோக்கம்

**1** **கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களோடு இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்**

மாணவர்கள் தம் மனத்தில் எழும் கருத்துகளைத் தன்னம்பிக்கையுடன் பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெறச் செய்தல் வேண்டும். அதற்காகக் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களோடு 21-ஆம் நூற்றாண்டிற்குத் தேவையான முக்கியத் திறன்களாகிய இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களும் இப்பாடத்திட்டத்தில் வலியுறுத்தப்படுகின்றன.

**2** **மரபுவழிக் கூறுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் மாணவர்களுக்கு நன்கு விளக்குவதோடு நாட்டு உருவாக்கத்திற்குத் தேவையான பண்புநலன்களையும் பெறச் செய்தல்**

மாணவர்கள் தம் இனத்தோடு தொடர்புடைய மரபுகள், பண்பாட்டுக் கூறுகள், பழக்க வழக்கங்கள், விழுமியங்கள், இலக்கியங்கள், வரலாறு முதலானவற்றில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்டு வளர்வதற்கும் அவற்றைப் போற்றிப் பாராட்டுவதற்கும் தாய்மொழி கற்றலன்றி வேறு சிறந்த வழி கிடையாது. சமூகத்தின் உறுப்பினர்களுக்கிடையே நல்லுறவை வளர்ப்பதற்கும் போற்றுவதற்கும் மொழிக் கல்வி உதவுகிறது.

# இருமொழிக் கற்றலின் பயன்கள்




இருமொழிக் கற்றல் 'வாழ்நாள் வெகுமதி' போன்றது: கல்வி அமைச்சர்


# இருமொழிக் கற்றலின் பயன்கள்

## அடையாளம் தரும் மொழி - கல்வி அமைச்சர் ஓங் யி காங் வலியுறுத்து




“உலகமயமாகிவரும் இன்றைய சூழலில் கூடுதலான மொழிகளைக் கற்றுக்கொள்வதால் பல கதவுகள் திறக்கப்படுகின்றன. இது கூடுதல் சாதக நிலையாக அமைகிறது. குறிப்பாக, உலகின் முன்னணி பொருளியல் நாடுகளை அண்டை நாடுகளாகக் கொண்டிருக்கும் சிங்கப்பூரை பொறுத்தவரையில் இது உண்மையான நிலை,” என்றார் அவர்.

# இருமொழிக் கற்றலின் பயன்கள்






# இருமொழிக் கற்றலின் பயன்கள்



# துடிப்புமிக்க மாணவர்கள் ஆற்றல்மிக்க பயன்பாட்டாளர்கள்






# துடிப்புமிக்க மாணவர்கள் ஆற்றல்மிக்க பயன்பாட்டாளர்கள்












# மாணவர்களின் திட்டப்பணி






# மாணவர்களின் திட்டப்பணி






# துடிப்புமிக்க மாணவர்கள் ஆற்றல்மிக்க பயன்பாட்டாளர்கள்

**1)** தினப் பாடம்

- கற்றல் கற்பித்தலுக்கான வளங்கள்
- தொழில்நுட்பம் சார்ந்த பாடங்கள் **(OPAL, SLS, iMTL)**
- **21-**ஆம் நூற்றாண்டு திறன்களையும் பண்புகளையும் வளர்க்கும் கற்றல் வளங்கள்.


**2)** வாரத்தில் இரு முறை தமிழில் வாசிப்பு

**3)** தீபாவளி கொண்டாட்டம்

**4)** இணை நல்லிணக்க நாள்

**5)** போட்டிகள் (மிடியாகார்ப் தமிழ்ப் போட்டிகள், சமூக மன்ற பேச்சுப் போட்டிகள்)


# மொழித் திறன்கள்



மாணவரை மையமாகக்கொண்ட கற்பித்தல்
ஒருங்கிணைக்கப்பட்ட மொழித்திறன்கள்
பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்
கேட்டல்
பேசுதல்
தமிழில் கருத்துப் பரிமாற்றத்திறன் பெற்ற மாணவர்
எழுதுதல்
படித்தல்
எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்
பண்பாடும் விழுமியங்களும்
அர்த்தமுள்ள மதிப்பீடு
ஏதுவான சூழல்

# உள்ளடக்கம்

- தேர்வு அமைப்பு முறை
- பெற்றோர் பங்கு
- எங்கள் பங்கு



# தாள் 1 - கட்டுரை

தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு

தமிழ்

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண் (மதிப்பளவு) |
|---|---|---|---|---|
| 1<br>(50 நி) | 1 <u>கட்டுரை</u><br>(100 சொற்களுக்குக் குறையாமல்)<br>1.1 கட்டுப்படுத்தப்பட்ட தலைப்பை அடிப்படையாகக் கொண்டது<br>1.2 படத்தொடரை அடிப்படையாகக் கொண்டது (6 கட்டங்கள்; 5 கட்டங்களில் மட்டுமே படங்கள்; 8 உதவிச்சொற்கள்) | கட்டுரை | 2<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | (20%)<br>40/(20%) |

# கேள்வி 1


**வினா 1**

ஏனக்குக் கிடைத்த சிறந்த பரிசு

**கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை நீ இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்:**

- நீ அந்தப் பரிசை எப்போது பெற்றாய்
- உனக்கு அந்தப் பரிசைக் கொடுத்தவர் யார்
- நீ ஏன் அந்தப் பரிசைச் சிறந்த ஒன்றாகக் கருதுகிறாய்
- அந்தப் பரிசைப் பெற்றபோது உன் மனநிலை எப்படியிருந்தது

# கேள்வி 2




- 8 உதவிச்சொற்கள்
- முடிவுரை – பொருத்தமாகவும் கச்சிதமாகவும் இருக்கவேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தாள் 2<br><br>கருத்தறிதல் மற்றும் மொழி மரபும் பயன்பாடும் (45%)<br>(1 மணி 40 நி) | **Booklet A** | | | | |
| | **Section A: மொழி மரபும் பயன்பாடும்** | | | | |
| | வேற்றுமை | தெரிவு விடை | 5 | 10 | 5 |
| | செய்யுள் /பழமொழி | தெரிவு விடை | 5 | 10 | 5 |
| | அடைமொழி/எச்சம் | தெரிவு விடை | 5 | 10 | 5 |
| | முன்னுணர்வுக் கருத்தறிதல் | தெரிவு விடை | 5 | 10 | 5 |
| | **Section B: கருத்தறிதல் 1** | | | | |
| | தெரிவுவிடைக் கருத்தறிதல் மற்றும் சொற்பொருள் | தெரிவு விடை | 5 | 10 | 5 |
| | **Booklet B** | | | | |
| | **Section C: மொழி மரபும் பயன்பாடும்** | | | | |
| | ஒலி வேறுபாட்டுச் சொற்கள் | நிரப்புதல் | 4 | 8 | 4 |
| | **Section D: கருத்தறிதல் 2** | | | | |
| | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் | தெரிவு விடை, சுயவிடை | 4 | 10 | 16 |
| | சுயவிடைக் கருத்தறிதல் | சுயவிடை | 7 | 22 | |
| | ***Booklet A & B Sub Total*** | | **40** | **90** | **(45)** |

# இரு வழித் தொடர்பு
# எழுத்துக் கருத்துப்பரிமாற்றம்

- கொடுக்கப்பட்டிருக்கும் சூழலைப் படித்து நன்கு புரிந்து கொண்டு கடிதம், குறுஞ்செய்தி, குறிப்பு, மின்னஞ்சல், அறிக்கை எழுதுதல்.
- பொருத்தமான பதிலுரை எழுதுதல்.
  - பகுதியைப் புரிந்துகொள்ளுதல்
  - கதாப்பாத்திரங்கள், நடக்கும் நிகழ்ச்சிகள் மற்றும் நடவடிக்கைகள் எவ்வாறு தொடர்பு உள்ளன என்பதை அறிதல்
  - பகுதியில் குறிப்பிடாததை எழுதக்கூடாது

## D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

தமிழை நேசிப்போம் : தமிழில் பேசுவோம்

தமிழ்மொழி இலக்கிய மன்றம் பெருமையுடன் வழங்கும்

# தமிழ்மொழி விழா 2014



உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான

**சொற்களம் 2014**

தேசிய நிலையிலான விவாதப்போட்டி

***இறுதிச் சுற்று***
***தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு***

தொடக்கப்பள்ளி 6-ஆம் வகுப்பு மாணவர்களுக்கான

**மின்மினி 2014**

**பாட்டுப்போட்டி**

*முதல் பரிசு - ரொக்கம் $1 000*
*இரண்டாம் பரிசு - ரொக்கம் $750*
*மூன்றாம் பரிசு - ரொக்கம் $500*

*இரண்டு ஆறுதல் பரிசுகள்*
*- $1 00 பற்றுச்சீட்டுகள்*





**சிங்கையின் முதல் தமிழ்க் கேலிச்சித்திரம் 2014**

ரிபப்ளிக் பலதுறைத் தொழிற்கல்லூரி மாணவர்கள் உருவாக்கிய கேலிச்சித்திரம்

*வெளியீடு காணும் நாள்: 22.11.2014*

*இடம்: மேனகா திரையரங்கு*
*நேரம்: இரவு 7.30 மணி*

**சொற்களம், மின்மினி போட்டிகளுக்கான சுற்றுகள்**
**இடம்: காந்தி மண்டபம்**

தேர்வுச்சுற்று
நாள்: 9.10.2014
நேரம்: காலை 9 மணி

இறுதிச்சுற்று
நாள்: 20.11.2014
நேரம்: காலை 9 மணி

இறுதிச் சுற்றுக்குத் தேர்வு பெறும் அனைவருக்கும் சிங்கையின் முதல் தமிழ்க் கேலிச்சித்திரம் காண இலவச நுழைவுச்சீட்டுகள்!

**நிகழ்ச்சிக்கு ஆதரவு: சிங்கப்பூர்த் தமிழ்ச் சங்கம்**





**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையைக் கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q30 இந்த விழாவில் எது முதல் முறையாக நடைபெறவுள்ளது? (2 மதிப்பெண்கள்)

(1) மின்மினி 2014
(2) சொற்களம் 2014
(3) தமிழ்க் கேலிச்சித்திரக் காட்சி
(4) தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பு ( )

Q31 இந்த விழாவின் நோக்கம் என்ன? (2 மதிப்பெண்கள்)

(1) மாணவர்களுக்குத் தமிழ்மொழியின் சிறப்பை விளக்குவது
(2) தமிழ்மொழியில் விவாதிக்க மாணவர்களை ஊக்குவிப்பது
(3) மாணவர்களைப் போட்டிகளில் பங்குபெறச் செய்வது
(4) தமிழ்மொழிமீது மாணவர்களை ஈடுபாடு கொள்ளச் செய்வது ( )

Q32 உயர்நிலை மாணவர்களுக்காக நடத்தப்படும் போட்டியால் விளையும் நன்மை என்ன? (2 மதிப்பெண்கள்)

(1) மாணவர்கள் விவாதம் செய்யும் திறனைக் கற்றுக்கொள்வார்கள்
(2) மாணவர்கள் தங்கள் கருத்துகளை வெளிப்படையாகக் கூறுவார்கள்
(3) மாணவர்கள் தெளிவாகப் பேசக் கற்றுக்கொள்வார்கள்
(4) மாணவர்கள் இனிமையாகப் பேசக் கற்றுக்கொள்வார்கள் ( )

Q33 பாட்டுப்போட்டியில் இரண்டாம் நிலையில் வருபவர் எவற்றைப் பெறுவார்? (4 மதிப்பெண்கள்)

______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________


(அடுத்த பக்கம் பார்க்கவும்)

Score:



இவ்வினா கடிதம் குறுஞ்செய்தி, மின்னஞ்சல் ஆகிய வடிவில் கேட்கப்படலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **தாள் 3 வாய்மொழி (25%) (சுமார் 10 நி)** | வாய்விட்டு வாசித்தல் | சுயவிடை | 1 | 20 | 10 |
| | ஒளிக்காட்சியை ஒட்டிய உரையாடல் | | 1 | 30 | 15 |



11

Q40 மலரின் குடும்ப நலனில் லட்சுமி அக்கறை கொண்டவர் என்பதை உணர்த்தும் இரண்டு செயல்களைச் சுட்டிக்காட்டி நீ உன் நண்பர் அருளுக்குக் குறிப்பு எழுது.

(4 மதிப்பெண்கள்)

அன்புள்ள அருள்,

லட்சுமி, மலர் குடும்பத்துக்கு உதவியுள்ளார்.

மதிப்பெண்கள்

முற்றும்

இவ்வினா கடிதம் குறுஞ்செய்தி, மின்னஞ்சல் ஆகிய வடிவில் கேட்கப்படலாம்.

ஏற்ற இடங்களில் ‘இப்படிக்கு’ என்று எழுத வேண்டும். உண்மையான பெயரை எழுதக்கூடாது.

# iMTL & Student Learning Space

- வாசித்தல்
- ஒளிக்காட்சி கொண்டமைந்த வாய்மொழிப் பயிற்சி



# iMTL & Student Learning Space



| | | | | | |
|---|---|---|---|---|---|
| கேட்டல் கருத்தறிதல் (10%) (சுமார் 30 நி) | பனுவல்கள் | தெரிவு விடை | 10 | 20 | 10 |
| | *Sub Total* | | | 70 | (35) |
| மொத்தம் | | | | 200 | 100 |

**ஒளியூடு விடைத்தாளில் (Optical Answer Sheet) தேர்ந்தெடுத்த விடையின் எண்ணுள்ள (1, 2 அல்லது 3) நீள்வட்டத்தை நிழலிடு.**

**<u>பனுவல் 1</u>**

Q1 இந்த அறிவிப்பின் நோக்கம் என்ன?

(1) மக்களைச் செல்லப் பிராணிகள் வளர்க்க ஊக்குவித்தல்
(2) மக்கள் எவ்வகைச் செல்லப் பிராணிகளை வீட்டில் வளர்க்கலாம் என்பதை அறிவித்தல்
(3) மக்கள் தங்கள் செல்லப் பிராணிகளைப் பொறுப்புடன் வளர்க்க ஊக்குவித்தல்

**<u>பனுவல் 2</u>**

Q2 மாலா தன் தங்கையை எங்குச் சந்திக்கிறாள்?










**<u>பனுவல் 3</u>**

Q3 மாணவர்கள் சென்ற சரியான வழியைக் காட்டும் படம் எது?


(1)




(2)




(3)



# எங்கள் பங்கு

# திறன் கண்டறிதல் சோதனை

- மாணவர்கள் தொடக்கநிலை 2 – 5 பங்கெடுத்தல்
- ஒவ்வொரு திறன் – பேசுதல், கேட்டல் போன்றவை
- மாணவர்கள் தங்களுடைய நிறை குறை அறிதல்.
- ஆசிரியரும் அவற்றை அறிந்து அவர்களுக்குத் தகுந்த கற்பித்தல் நடத்துதல்

# பேசுதல்

- SLS & IMTL பயன்படுத்துவோம்



செங்காங் கிரீன் தொடக்கப்பள்ளி


வாசிப்புப் பயிற்சி

தொடக்கநிலை 5



பெயர்:__________

வகுப்பு:__________




**வாசிப்பு பகுதி 2**

ஓர் ஊரில் கந்தசாமி என்ற செல்வந்தர் ஒருவர் வாழ்ந்தார். அவர் மிகவும் பிடிவாதக் குணம் படைத்தவர். உணவு உண்ணும்போது யாரும் வாய்திறந்து அவரிடம் பேசக்கூடாது.

ஒருநாள் அவர் தம் குடும்பத்தினருடன் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் அவருடைய பேரன் அமர்ந்திருந்தான். அப்போது அவன் "தாத்தா", என்று ஏதோ சொல்ல விரும்பினான். உடனே கந்தசாமி, "குழந்தாய்! சாப்பிட்டு முடித்த பின்னர் பேசு", என்று கூறிவிட்டார். சிறுவனும் பேசாமல் இருந்துவிட்டான்.

அனைவரும் சாப்பிட்டு முடித்தனர். பின்னர் சிறுவன், "தாத்தா உங்கள் உணவில் ஓர் ஈ விழுந்துவிட்டது. அதைத்தான் சொல்ல நினைத்தேன்", என்றான். கந்தசாமியின் முகத்தில் ஈயாடவில்லை.



தமிழ்மொழி
வாசிப்பு மதிப்பேடு

| ☺ அளவை | மிக நன்று | நன்று | சராசரி | சராசரிக்கும் கீழ் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| | 5 | 4 | 3 | 2 | 1-0 |
| உச்சரிப்பு | மிகச் சரியாகவும் தெளிவாகவும் அமைந்த உச்சரிப்பு | சில பிழைகள் (கூடுதலாக 2 பிழைகள்) மட்டும் கொண்ட உச்சரிப்பு | சில பிழைகள் (கூடுதலாக 4 பிழைகள்) மட்டும் கொண்ட உச்சரிப்பு | பல இடங்களில் தவறான உச்சரிப்பு | பெரும்பாலும் எல்லா இடங்களிலும் தவறான உச்சரிப்பு |
| கருத்து | | | | | |

| ☺ அளவை | மிக நன்று | நன்று | சராசரி | சராசரிக்கும் கீழ் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| | 5 | 4 | 3 | 2 | 1-0 |
| தெளிவும் சரளமும் | தயக்கமின்றி மிகச் சரளமாகவும் சீராகவும் வாசித்தல் | 1-2 இடங்களில் மட்டுமே தயக்கம் காட்டுவதோடு தானே பிழைகளைத் திருத்திக்கொண்டு வாசித்தல் | 2-3 இடங்களில் மட்டும் தயக்கத்துடன் மெதுவாக வாசித்தல் | 3-க்கும் மேற்பட்ட இடங்களில் தயக்கத்துடனும் மெதுவாகவும் வாசித்தல் | ஏறக்குறைய எல்லா சொற்களையும் தனித் தனிச் சொல்லாக எழுத்துக்கூட்டி வாசித்தல் |
| கருத்து | | | | | |

மதிப்பெண் :

# எழுதுதல்

- எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்
  - பயிற்சிகள்
  - கருத்துத் திரட்டுதல், நடித்தல்

- கட்டுரை
  - முழு கட்டுரை எழுத தெரியும்
  - கேள்விக் குறிப் படத்திற்குப் பயிற்சி தருதல்
  - மாதிரி கட்டுரைகள்

# கட்டுரை, பேசுதல், கருத்தறிதல்

SENGKANG GREEN Primary School

செங்காங் கிரீன் தொடக்கப்பள்ளி
வாய்மொழிப் பயிற்சி
S.P.A.C.E

| | |
|---|---|
| இடம் (setting) | • சம்பவம் நடந்த இடத்தை/இடங்களை அடையாளம் கண்டுகொள்ளுதல்<br>• இடத்தைப்/இடங்களைப் பற்றிய விவரங்களைத் தெளிவாகக் கூறுதல் |
| கதாப்பாத்திரங்கள் (people) | • கதாப்பாத்திரங்களை அடையாளம் கண்டுகொள்ளுதல்<br>• கதையில் கதாப்பாத்திரங்களின் பங்கைப் புரிந்துகொள்ளுதல்<br>• கதாப்பாத்திரங்களின் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு விவரித்தல் |
| நடவடிக்கைகள் (activities) | • நடவடிக்கைகளை விவரித்தல்<br>• காரணங்களைக் கூறுதல்<br>• விளைவுகளை விவரித்தல் |
| உச்சக்கட்டம் (consequences/climax) | • கதையின் உச்சக்கட்டத்தை அடையாளம் காணுதல்<br>• அதைப்பற்றி விவரித்தல்<br>• ஏற்படுத்திய பாதிப்புகள்/விளைவுகள் |
| முடிவு (ending) | • கதை உணர்த்தும் முக்கியக் கருத்தை விவரித்தல்<br>• சொந்தக் கருத்தைக் காரணங்களோடு கூறுதல் |

பெயர்:______________________ தேதி:______________
பாடத் தலைப்பு:__________________

| | |
|---|---|
| இடம் (setting) | |
| கதாப்பாத்திரங்கள் (people) | |
| நடவடிக்கைகள் (activities) | |
| உச்சக்கட்டம் (consequences/climax) | |
| முடிவு (ending) | |

# வாசிப்பு (கதைப் புத்தகங்கள்)

- கண்டிப்பாக நிகழ்த்தப்படும்
- புத்தகப் பகிர்வு
- பலதரப்பட்ட படைப்பு வகைகள் (Genre)
- கதைக் கூறுதல்
- பரிசுப் பெற்றக் கதைகளை ஆராய்தல்
- மேலும் சில நடவடிக்கைகள்
- ஆசிரியர் தேர்ந்தெடுக்கும், மாணவரும் தேர்ந்தெடுக்க வேண்டும்

# பெற்றோர் பங்கு

# வாசிப்புப் பழக்கம்

- பாடநூலை நன்கு பயன்படுத்துங்கள்– சத்தமாக வாசிக்கத் தூண்டுங்கள்
- கதைகள் வாசிக்கும் போது சேர்ந்து வாசியுங்கள் – கதையில் வரும் பாத்திரங்கள், கதையின் போக்கு, கதைக்கரு, விழுமியங்கள் ஆகியவற்றைப்பற்றிக் கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடுங்கள்
- வீட்டில் சிறிய நூலகம்

# வாசிப்புப் பழக்கம்

- தமிழில் பேசுவதற்குச் சிரமம் இருப்பினும் அவர்கள் படிப்பதையும் பேசுவதையும் ஆர்வத்தோடு கேளுங்கள்; ஊக்கப்படுத்துங்கள்.

சொல்வளம் மற்றும் புத்தாக்கச் சிந்தனை

- கதைப்புத்தகங்கள், செய்தித்தாள் (திங்கள்)
- தொலைக்காட்சி செய்தி (நாளும் ஒரு சொல்)MeWatch,MeListen

# எழுதுதல் திறன்

- பள்ளியில் கற்றதை வெண்பலகையில் எழுதிக்காட்டச் சொல்லலாம்.
- நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தை ஊக்குவிக்கலாம் (அன்புள்ள நாள்காட்டி)
- நன்றி கூறுதல், வாழ்த்துக் கூறுதல் – அட்டை அல்லது குறிப்பு எழுத ஊக்குவிக்கலாம்

# கேட்டல் திறன்

- உரையாடல் கேட்டல்
- பாடல்கள், கேலிச்சித்திரம், நாடகங்கள் போன்றவற்றை
- வானொலி நிகழ்ச்சிகள் கேட்டல்
- கட்டளைகள் கூறல்

# தமிழ்மொழி மாதம்

- ஏப்ரல் மாதம் - விழாவாக ஒரு மாதம் கொண்டாடுதல்
- பள்ளியில் நடவடிக்கைகள் ஏற்பாடு
- பல அமைப்புகள் நிகழ்ச்சிகள், போட்டிகள், கலந்துரையாடல், சிறப்பு விருந்தினர் பேச்சு
- நூலகம், நாடக நிறுவனம், தொலைக்காட்சி, இந்திய மரபுடைமை நிலையம், இன்னும் பல...
- பங்குபெற்று பயன் பெறவும்



# கற்றல் வளங்கள்

- https://sangamam.moe.edu.sg/tamilosai/slot/u113/web/p5a-sel.html
- https://www.schoolbag.sg/
- https://www.tamil.org.sg/ta

நம் பிள்ளைகளின் கல்விப் பயணத்தை இனிதாக்க, எங்களுடன் இணைய வாருங்கள்!

# நன்றி